**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, காஞ்சிபுரம்**

**சி.சி. 74/2025**

**அரசு தரப்பு சாட்சி அ.சா.2**

பெயர் :- சரண்யா

கணவர் பெயர் :- Damodharan

கிராமம் :- Angampakkam

தாலுகா :-

ஜாதி :-

மதம் :-

தொழில் :-

வயது :- 31

நாள் :- 08.06.2026

2023ம் வருடத்திய சாட்சிய சட்டத்தின்படி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**( எதிரி ஆஜர் இல்லை, பிஎன்எஸ்எஸ் பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

நான் வாலாஜபாத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லதரசியாக உள்ளேன். அ.சா.1 எனது அம்மா ஆகும். எனக்கு எதிரி தியாகு என்பவரை தெரியும். அவர் அரசுப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். அவர் எனது கணவரின் நண்பர் மூலமாக எங்களுக்கு நன்கு பழக்கம். அதனடிப்படையில், கடந்த 2021ம் வருடம் நவம்பர் மாதம் எங்களை அணுகி நீங்கள் எனக்கு பணம் தந்தால் 1 லட்சத்திற்கு ரூ.6,000/- வைத்து வட்டி தருவதாக கூறினார். அவரை நம்பி ரூ.13 லட்சத்தை அவரது வங்கி கணக்கில் எனது வங்கி கணக்கான ஐஓபி வங்கி கணக்கிலிருந்து எதிரியின் ஐசிஐசிஐ வங்கி கணக்கிற்கு 26.11.2021 தேதியில் ரூ.8லட்சமும்,

13.12.2021 ரூ.5 லட்சமுமாக தனித்தனியாக போட்டோம். ரூ.72,000/- ஒரு மாதமும், ரூ.45,000/- ஒரு மாதமும் எனது வங்கி கணக்கிற்கு பணம் கொடுத்தார். பின்னர் எதிரியை தொடர்பு கொண்டு எனது பணத்தை திரும்ப கேட்ட போது அவர் ரூ.8 லட்சம் மற்றும் ரூ.5 லட்சத்திற்கு எஸ்பிஐ வங்கியின் காசோலையை கொடுத்தார். மேற்படி காசோலைகளை எனது வங்கியில் செலுத்திய போது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திரும்ப வந்துவிட்டது. என்னிடம் காட்டப்படும் இந்தியன் எஸ்பிஐ வங்கியின் காசோலைகள் இரண்டு எதிரி எனக்கு கொடுத்த காசோலைகள் ஆகும். எஸ்பிஐ வங்கி காசோலை எண்.785336 அ.சா.ஆ.2 ஆகவும், 052492 அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** இல்லை

Sd/- K. Essakki Magesh Kumar
Judicial Magistrate No.1,
Kancheepuram.